©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 304] CHENNAI, TUESDAY, SEPTEMBER 6, 2011
Aavani 20, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்.**

**வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், வெங்களாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ3/38/2011.)*

**No. VI(2)/443(c)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகள் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெங்களாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி A. செல்வி என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு இலவசமாக வீடு வழங்கும் சமத்துவபுர திட்ட பயனாளிக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய பயனாளிகளிடம் பணம் பெற்றது, திட்டத்தை செயல்படுத்துவதற்கு இடையூறாக இருந்தது, அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியது மற்றும் தன் கடமையை சரிவர செய்ய தவறியது போன்ற முறைகேடுகள் தொடர்பாக அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த விளக்கங்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி வெங்களாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி A. செல்வி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

வேலூர்,
**2011 ஆகஸ்ட் 27.**

**எஸ். நாகராஜன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (304)